தந்தையை தளபதி

சிறையில் வைக்கவில்லை! சிறகில் வைத்திருந்தார்!

கவிப்பேரரசு வைரமுத்து உருக்கம்!

கடைசிக் காலத்தில்
கலைஞர்
சிறைப்படுத்தப்பட்டிருந்தார்
என்ற அரசியல் கூற்று
உண்மைக்கு மாறானது

அதற்கு
நானும் ஒரு சாட்சி

கலைஞரின் உடல்நிலை
மருத்துவத்தின் கைகளுக்கு
மாறிவிட்டது

முதுமை நோயுடைமை
தொண்டைத் துளை
பேச்சின்மை
மருந்துகளின் தாக்கம்
போன்ற காரணங்களுக்காக
மருத்துவர்களின் அறிவுரையைத்
தளபதி மு.க.ஸ்டாலின்
கவனமாகப் பின்பற்றினார்

நோய்த்தொற்றைத் தடுக்கவே
பார்வையாளர்கள்
ஒழுங்குபடுத்தப்பட்டனர்

அவர் ஆயுளை நீட்டிக்கவே
கட்டுப்பாடுகள் திட்டமிடப்பட்டன

வாரம் ஒருமுறை
அல்லது இருமுறை

நான் கலைஞரைச்
சந்திக்கும் வாய்ப்பை
யாரும் தடுக்கவில்லை

மென்மையாய்;
மிக மென்மையாய்
அவர் கையாளப்பட்டார்

கலைஞர் இரண்டாம்
குழந்தை நிலையில் இருந்தார்

தொட்டில் என்பது
ஒரு குழந்தைக்குச்
சிறையாகிவிடாது

தந்தையைப் பிள்ளைபோல்
பாதுகாத்தார் தளபதி

தந்தையை அவர்
சிறையில் வைக்கவில்லை;
சிறகில் வைத்திருந்தார்

தமிழர்கள் அறிவார்களாக



கவிப்பேரரசு
வைரமுத்து

கடலூர் கிழக்கு மாவட்டம், குறஞ்சிப்பாடி சட்டமன்றத் தொகுதி, மதசார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி செயல்வீரர்கள் கூட்டம், குறஞ்சிப்பாடி பத்மாவதி திருமண மண்டபத்தில் நடைப்பெற்றது. குறிஞ்சிப்பாடி சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார். காங்கிரஸ் எம்.கே.விஷ்ணுபிரசாத், எம்.பி, தி.க.துரைசந்திரசேகரன், தே.மு.தி.க, சிவக்கொழுந்து, வி.சி.க. பா.தாமரைச்செல்வன், ம.தி.மு.க, இராமலிங்கம்,சிபிஎம்,மாதவன், சிபிஐ துரை, ஒன்றிய கழக செயலாளர் வி.சிவக்குமார் உள்ளிட்ட மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி சட்டமன்றத் தொகுதி செஞ்சி கிழக்கு ஒன்றியம் ஒட்டம்பட்டு, காரை, வரிக்கல், அனையேரி மேல் அருங்குணம்ஆகிய கிராமங்களில்செஞ்சி தொகுதி திமுக வேட்பாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ வாக்காளர்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார் அப்போது அனையேரிஊராட்சிக்கு வாக்கு சேகரிக்க சென்றதிமுக வேட்பாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏவுக்கு அப்பகுதி வாக்காளர்கள் கையில் மெழுகுவர்த்தி ஏந்தி உற்சாக வரவேற்பளித்தனர். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.

கழகத் தலைவர், முதலமைச்சர் தளபதியார், கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் இளந்தலைவர் ஆகியோர்களின் நல்லாசியுடன், மீண்டும் விழுப்புரம் சட்டமன்ற தொகுதியில் போட்டியிடுவதற்கு, விழுப்புரம் சட்டமன்ற தொகுதி வேட்பாளர், விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் இரா.இலட்சுமணன் வேட்புமனு தாக்கல் செய்தார்.

தி.மு.க. இளைஞர் அணி

கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தேர்தல் பரப்புரை சுற்றுப்பயண அறிவிப்பு

கழக இளைஞர் அணிச் செயலாளர் – மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 2026 சட்டமன்றத் தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் வேட்பாளர்களை ஆதரித்து, முதல்கட்ட பரப்புரையை முடித்துள்ள நிலையில், 2–ஆம் கட்டமாக தஞ்சாவூர், அரியலூர், பெரம்பலூர், கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களிலும், புதுச்சேரி மாநிலத்திலும் அவர் மேற்கொள்ள உள்ள பரப்புரை பயண விவரம் வருமாறு :

6.4.2026 திங்கள்கிழமை

காலை 10.00 மணி	திருவையாறு	தேரடி திடல், திருவையாறு.
காலை 11.30 மணி	கும்பகோணம்	காந்தி பார்க், கும்பகோணம்.
மாலை 4.00 மணி	திருவிடைமருதூர்	கடைவீதி, பந்தநல்லூர்.
மாலை 5.00 மணி	ஜெயங்கொண்டம்	அண்ணா சிலை அருகில், ஜெயங்கொண்டம்.
மாலை 6.30 மணி	குன்னம்	கடைவீதி, குன்னம்.
இரவு 8.00 மணி	உளுந்தூர்பேட்டை	அண்ணா சிலை அருகில், உளுந்தூர்பேட்டை.

7.4.2026 செவ்வாய்க்கிழமை

நேரம்	தொகுதிகள்	இடம்
காலை 10.00 மணி	முதலியார்பேட்டை, உப்பளம், பாகூர்.	மரப்பாலம், முதலியார்பேட்டை.
காலை 10.45 மணி	வில்லியனூர், திருபுவனம், மங்கலம்.	கிழக்கு சந்நிதி வீதி, வில்லியனூர்.
காலை 11.30 மணி	நெல்லித்தோப்பு, உருளையான்பேட்டை, காலாப்பட்டு, கதிர்கிராமம், ராஜ்பவன்.	அண்ணா சிலை எதிரில், அண்ணா சாலை, புதுச்சேரி.

அன்பகம்
தேனாம்பேட்டை,
சென்னை-18

கலைஞர் 100 1924 - 2023

பெரம்பலூர் தொகுதி வேட்பாளர் மருத்துவர் ச.த.ஜெயலெட்சுமி மனு தாக்கல்!

பெரம்பலூர், ஏப். 6 - பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதி (தனி) வேட்பாளர் ச.த.ஜெயலெட்சுமி, பெரம்பலூர் தேர்தல் அதிகாரியும் கோட்டாட்சியருமான அனிதாவிடம் நேற்று முன்தினம் (04.04.2026), வெள்ளிக்கிழமை அன்று வேட்பு மனு தாக்கல் செய்தார். அதன்பிறகு செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்,

அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, ரிங் ரோடு, சின்னமுட்லு நீர்த் தேக்கம், பெரம்பலூர் அரசு தலைமை மருத்துவமனைக்கு அதிநவீன உபகரணங்கள் மற்றும் நகரத்தில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் மேம்பாலங்கள் கொண்டு வர பாடுபடுவேன் என்றும் 42 ஆண்டுகளுக்கு பிறகு பெண்களுக்கு இந்த தொகுதியை தி.மு.க. தலைமை ஒதுக்கியுள்ளது. இது பெண்கள் மத்தியில் ஆதரவாக உள்ளது எனவும் கூறினார். அப்போது மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், காங்கிரஸ் கட்சி மாநில செயலாளர் வழக்கறிஞர் த.தமி ழ்செல்வன், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் மாவட்ட செயலாளர் சர்புதீன், ம.தி.மு.க.மாவட்ட செயலாளர் ஜெயசீலன், விடுதலை சிறுத்தைகள் கட்சி மாவட்ட செயலாளர் கிருஷ்ணகுமார், தலைமை செயற்குழுவின் உறுப்பினர்கள் மு.அட்சய கோபால், வழக்கறிஞர் என். ராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர்,நூருல் ஹிதா இஸ்மாயில், சன்.சம்பத், மாவட்ட பொருளாளர் செ.ரவிச்சந்திரன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் எம்.இராஜ்குமார், செ.நல்லதம்பி, தி.மதியழகன், சி.ராஜேந்திரன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் டாக்டர் செ.வல்லபன், ந.ஜெகதீஷ்வரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

நா. புகழேந்தி
ஏப்ரல் 6 (2024)



இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்றத் தொடங்கியவர்.

1974ல் கிளைச் செயலாளர், மாவட்ட பிரதிநிதி, பொதுக்குழு உறுப்பினர், ஒன்றியப் பொறுப்பாளர், மூன்று முறை ஒன்றியச் செயலாளர், மாவட்ட பொருளாளர், மாவட்ட அவைத்தலைவர், பின்னர் இரண்டு முறை விழுப்புரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

ஊராட்சி மன்ற தலைவராவும் – ஊராட்சி ஒன்றிய பெருந் தலைவராகவும் – இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

“மக்களோடு மக்களாக வாழ்ந்த புகழேந்தி அவர்களது மறைவு, விக்கிரவாண்டி தொகுதிக்கும், விழுப்புரம் மாவட்டத்திற்கும் மட்டுமின்றி, கழகத்திற்கும் பேரிழப்பாகும்” என கழகத் தலைவர் அவர்கள் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.